107

**கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திரு. எஸ். தனராசு, பி.இ.,**
**திட்ட அனுமதி**
**நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்**

ந.க.எண். **5955/2018/உ_திகு-2**
தி.அ.எண். **62 /2019**
உள்ளாட்சியின் பெயர்: **அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி**

நாள்: **22.02.2019**

பொருள் : **மனைப்பிரிவு - திட்ட அனுமதி** - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் வட்டம் - அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் - நில அளவு எண்கள். 144/1B, 144/2, 144/3 - ல் **4.80** ஏக்கர் மனையிடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர் திருமதி. B. பானுமதி, திரு. V. சீனிவாசன் மற்றும் திரு. P. செந்தில்குமார், கோயம்புத்தூர் அவர்களின் விண்ணப்பம் நாள் 20.11.2018
2. தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண். 04/2018, நாள் 26.11.2018 (ம) 5.02.2019.
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் தீர்மானம் எண்.42 நாள் 29.11.2018
4. மனுதாரர் வளர்ச்சி கட்டணம் செலுத்திய நாள் 20.02.2019.

*****

உத்தரவு:

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம் - அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் - நில அளவு எண்கள். 144/1B, 144/2, 144/3 - ல் **4.80 ஏக்கர்** பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு **ம.வ/கோஉ_திகு.எண.52/2019** என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதியும் **திட்ட அனுமதி எண்.62/2019** என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின்படி திட்ட அனுமதியும் அளிக்கப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## சிறப்பு நிபந்தனை-1

1. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்யஉரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

2) The Tamil Nadu Government in G.O.Ms No. 112, Housing and Urban Development Department Dated. 22.06.2017 has approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

## பொது நிபந்தனைகள்

1. இந்த திட்ட அனுமதியானது கோயம்புத்தூர் உள்ளுர் திட்டக்குழுமத்திற்கு உட்பிரிவு 1 மற்றும் 2 பிரிவு 91-A நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 (சட்டம் 35 – 1972)ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.
2. பிரிவு 79 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35–1972)ன் படி எந்த நபராவது இந்த உத்திரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)ன் கீழ்மறுக்கப்பட்டிருப்பின் உத்திரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.
3. கோயம்புத்தூர் உள்ளுர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்டஅனுமதி அளித்த பிறகு
   (1) திட்டஅனுமதி பெற தவறான விபரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ,
   (2) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ,உறுப்பினர் செயலர் மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ

ரத்து செய்யவோ உரிமையுண்டு.

4. தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

5. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனைப்பிரிவு அபிவிருத்திக்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (**அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி** உட்பட) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் மனைப்பிரிவு அபிவிருத்திக்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

7. **திட்டஅனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் காட்சிக்கு (Display) வைக்கப்படவேண்டும்.**

22/2/19

**உறுப்பினர் செயலர் (பொறுப்பு)**
**கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,**
**கோயம்புத்தூர் - 12.**

22/02/19

**இணைப்பு**

முத்திரையிட்ட வரைபடம் - 2
நிபந்தனை படிவம் - 2

**பெறுநர்**

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்,
அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி,
சூலூர் வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

**நகல் மனுதாரர் (உள்ளாட்சி மூலமாக)**

திருமதி. B. பானுமதி,
திரு. V. சீனிவாசன் மற்றும்
திரு. P. செந்தில்குமார்,
1/571, முதலிபாளையம்,
நீலாம்பூர், அரசூர் அஞ்சல்,
கோயம்புத்தூர் - 641 407.

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம் சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம்
அப்பநாயக்கன்பட்டி ஊராட்சித் தனி அலுவலரின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி ஜெ ஷீலா

மனைப்பிரிவு அங்கீகார எண் 01/2018-2019, நாள் 05.03.2019

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம்- கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் வட்டம் சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம் - அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் - நில அளவு எண்: 144/1B,144/2,144/3 - ல் 4.80 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்திரவு பிறப்பித்தல்- தொடர்பாக.

பார்வை: கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர்(பொ) அவர்களின் உத்திரவு, ந.க. எண்.5955/2018, உதிகு- 2, நாள் 22.02.2019

>> <<

**உத்திரவு**

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம் சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம், நில அளவு எண்: 144/1B,144/2,144/3 - ல் 4.80 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வையில் காண் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர்(பொ) அவர்களின் உத்திரவின்படி **ம.வ.(கோ.உ.தி.கு)எண்: 52/2019, திட்ட அனுமதி எண்:** 62/2019 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொழில் நுட்ப அனுமதியில் கண்டுள்ள நிபந்தனைகளின் படியும் அப்பநாயக்கன்பட்டி ஊராட்சியின் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கண்ட மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. குடிநீர் வசதி ஏற்படுத்த வேண்டும்.
2. தெருவிளக்கு வசதி ஏற்படுத்த வேண்டும்.

இணைப்பு :

1. உள்ளூர் திட்ட குழும உத்திரவு
   மற்றும் நிபந்தனைகள்
2. மனைப்பிரிவு வரைபடம்.

5.3.19
தனி அலுவலர்
அப்பநாயக்கன்பட்டி ஊராட்சி

5/3/19 5/3/19

பெறுநர்:

திருமதி.B.பானுமதி
திரு.V.சீனிவாசன் மற்றும்
திரு.P.செந்தில்குமார்,
1/571 முதலிபாளையம்,
நீலாம்பூர், அரசூர் அஞ்சல், கோயம்புத்தூர்- 641 407.

நகல்:

1. உறுப்பினர்/செயலர்,
   கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம்,
   சிவானந்தா காலனி,
   கோயம்புத்தூர்- 641 012
2. சார்பதிவாளர்,
   சார்பதிவகம், சூலூர்